20th January 1961]

Sri A. VEDARATHNAM : முக்கியமான உணவுப் பண்டங்களின் விலையை மட்டுமாவது கடைகளில் எழுதிப் போடும்படிச் செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கடைகளில் விலைகளைப் போடவேண்டுமென்றால் விலை நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி விலை நிர்ணயம் செய்யப்பட்டால் அப்பொழுது கண்ட்ரோல் வருவது மாதிரியாகும். அதை பொது மக்கள் சாதாரணமாக விரும்பமாட்டார்கள். ஆகவே அம்மாதிரி உத்தேசம் இல்லை.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that such display of prices will help the public to boycott and reject those goods which are highly priced?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : If the prices are high and there is exploitation, the public can freely understand them and they can take their own action.

Potatoes

* 31 *Q.*—**Sri A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் உருளைக்கிழங்கிற்கு என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது?

(இ) இதை மாற்றி அமைக்க உத்தேசமுண்டா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) There is no control over the price of potatoes.

(   ) Does not arise.

Sri A. VEDARATHNAM : சமீபத்தில் உருளைக்கிழங்கின் விலை அவர்களுக்கு கட்டுபடியாகாத அளவு குறைந்து விட்டதென்று அரசாங்கத்தினிடம் டெப்யுடேஷன் வந்தார்களா? அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : உருளைக்கிழங்கின் விலை விவசாயிகளுக்கு கட்டுபடியாகாத அளவு குறைந்துவிட்டதென்று வந்து தெரிவித்தார்கள். ஆனால் அதில் நேரிடையாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள ஒன்றுமில்லை. அதை அப்படியே அரசாங்கம் அதிக விலைக்கு வாங்கி எடுத்துக் கொள்ளமுடியாது. அப்படி கனம் அங்கத்தினர்கள் யாரும் யோசனை கூற மாட்டார்கள். ஆனால் வேறு சில வசதிகள், ரெயில் வசதிகள், வேறு ராஜ்யங்களில் விற்க வசதிகள் இவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகின்றன.

Sri J. MATHA GOWDER : சென்ற ஆண்டு உருளைக்கிழங்கின் விலை மிகமிகக் குறைவாக விற்ற காரணத்தினால் விவசாயிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்களிடம்

[20th January 1961

சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கார் அவர்களிடமிருந்து நேரிடையாக வாங்கி விற்கவில்லை என்றாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏதாவது உதவி செய்ய சர்க்கார் என்ன யோசித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில சமயங்களில் உருளைக்கிழங்கு விலை அதிகம் ஆகிறது. அப்பொழுது அதிக லாபம் வருகிறது. குறைந்தால் நஷ்டம் ஏற்படலாம், இல்லை நஷ்டம் இல்லாமல் லாபம் குறையலாம், இதற்கெல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கம் ஈடு செய்வது என்று எதிர்பார்க்க முடியாது.

SRI B. K. LINGA GOWDER: Is there any proposal before Government to fix a minimum price for potatoes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no such proposal before Government.

Co-operative Spinning Mills

* 32 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை கூட்டுறவு நூற்பு மில்கள் ஏற்படுத்தப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : In the Draft Third Plan for the State, provision has been made for the establishment of four co-operative spinning mills. They are only tentative at this stage.

SRI S. M. ANNAMALAI : வடாற்காடு மாவட்டத்தில் வந்தவாசியில் ஒரு நூற்பு மில் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று சர்க்காருக்கு கோரிக்கை வந்திருக்கிறதா ? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதை ஆரம்பிக்க முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பலவிடங்களிலிருந்து அந்த விதமான கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எந்தயிடத்தில் என்று இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

SRI A. VEDARATHNAM : இந்த நான்கு மில்களை எந்தெந்த இடத்தில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் ஏதாவது இந்த நூற்பு பஞ்சாலைகள் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN: தஞ்சை ஜில்லாவில் 12,000 கதிர்கள் கொண்ட ஒரு மில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு சாங்ஷனாகியிருக்கிறது என்று சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். I want to add that it is in the private sector and not in the public sector.